**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.219/2021**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மலைசாமி | Caste | : |
| Father 's Name | : புளியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(25.06.2025)**

**முதல் விசாரணை**

நான் எலியார்பத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் வாட்ச்மேனாக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ராமாயி எனது அம்மா ஆவார். கடந்த 02.07.2017 ம்தேதியன்று மதியம் 2 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள கோப்பம்மாள் கோவில் அருகே உள்ள வேப்பமரம் அருகே எனது அம்மா படுத்திருந்தார்கள். அதன் அருகே உள்ள ராமன் என்பவரது வீட்டில் விசேசம் நடைப்பெற்றது. மேற்படி விசேசத்திற்கு வந்த TN 59 3013 என்ற காரை அதன் ஓட்டுனர் வேகமாக திருப்பும்போது எனது அம்மாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த இடத்திலிருந்து சுமார் 100 அடி தொலைவிலிருந்து பேச்சியம்மன் கோவில் அருகே நான் இருந்தேன். விசேசம் நடந்த ராமன் மனைவி பெருமாளாக்காள் அங்கு வந்து மேற்கண்ட தகவலை கூறினார். நான் வந்து பார்த்தபோது எனது அம்மாவை விபத்து ஏற்படுத்திய காரின் உள்ளே உட்கார வைத்திருந்தார்கள். என் அம்மா பேசும் நிலையில் இல்லை. எனது அம்மாவிற்கு கையில் காயமும், நெஞ்சு பகுதில் பலத்த காயமும் இருந்தது. எனது அம்மாவை அதே காரில் எனது அம்மாவை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைகாக அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்து விட்டு என் அம்மா இறந்து விட்டதாக கூறினார்கள். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை பரமேஸ்வரன் என்பவர் ஓட்டினார் என பின்னர் நான் கேட்டு தெரிந்துக்கொண்டேன்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**